**கிழக்கு நுவரகம் பலாத பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 செப்டம்பர் 03 ஆந்திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்டம்பர் 18 ஆந்திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கிழக்கு நுவரகம் பலாத பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் சொத்துக்கள் கட்டுமாணம் மற்றும் புதுப்பித்தல் செயற்பாடுகள் 05 இற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 3,476,404 மூலதனமாகக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சகல மூலதனச் செலவுகளையும் மூலதனமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ii) | மீளாய்வாண்டில் 48 இடங்களில் சொத்துக்கள் குத்தகைக்கு வழங்கியமையால் கிடைத்த வருமானம் ரூபா 1,448,635 ஆயினும் நிதி அறிக்கைகளில் ரூபா 2,289,549 ஆக காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 840,914 மேலதிகமாக காட்டப்பட்டிருந்தது. | வருமானம் சரியாக இனங்காணப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 44,703,832 பெறுமதியான 04 கணக்கு மீதிகளின் பெறுமதி அட்டவணையின் பிரகாரம் அதன் பெறுமதி ரூபா 45,481,487 என எடுக்கப்பட்டிருந்தால் ரூபா 1,492,343 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | உரிய மீதிகளில் வேறுபாடுகள் ஒப்பிடப்பட்டு சீராக்கப்பட வேண்டும். | இனக்கஞ் செய்வது பற்றி ஆராய்ந்து சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(இ) கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு**

**(i) பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் இருக்கும் ரூபா 1,146,420 ஆன நிர்மாணக் கடன்பட்டோர் மீதி 17 ஆகும். | கிடைக்க வேண்டிய நிலுவை அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ii) செலுத்த வேண்டிய கணக்குகள். | | |
| • 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக செலுத்தப்படாமல் இருந்த புறநெகும கடன்கொடுத்தோர் மீதி ரூபா 1,324,936 ஆகும் | கிடைக்க வேண்டிய நிலுவை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |
| • சபையினால் அறவீடு செய்யப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு செலுத்தாமல் நிறுத்தி வைத்த முத்திரை வரியின் பெறுமதி ரூபா 2,089,544 ஆகும். | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |

| | | |
|---|---|---|
| • மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் ஓய்வூதியத் திணைக்களத்துக்கு செலுத்த வேண்டிய ஓய்வூதிய பணிக்கொடையின் பெறுமதி ரூபா 913,519 ஆகும். | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஓய்வூதிய பணிக்கொடையின் பெறுமதி குறித்து ஓய்வூதியத் திணைக்களத்திடம் விபரம் கேட்டு அனுப்பப்பட்டுள்ளது. |

**(ஈ) கணக்காய்விற்கு சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 182,715,506 ஆகவுள்ள 19 கணக்கீட்டு விடயங்களுக்குரிய ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகள் சர்ப்பிக்கப்படவில்லை. . | நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிப்பெறுமதியை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571(ii) | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்படும் ரூபா 80,500 பெறுமதியான வைப்புகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | நிதிப் பிரமாணம் 571(ii) இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | காலாவதியான வைப்பாளர்களுக்கு தமது வைப்புகளை பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 02 வாரங்களுக்குள் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் கோவை<br>-----------------------------<br>முதலாவது அத்தியாயம் விதிகள் 5.11 | சபைக்குச் சொந்தமான வீதிகள் நிதி மற்றும் ஏனைய பெறுமதியான பொருட்கள் தொடர்பாக காப்புறுதிக் காப்பீடு ஒன்று இருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும் | சபைக்குச் சொந்தமான வழியில் காசு மீதி மற்றும் வேறு பெறுமதியான பொருட்களுக்கு காப்புறுதிக் காப்பீடு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | 2006 நவம்பர் 14 ஆந் திகதிய PL/07/01/53 ஆம் மாகாண சபைகள் மீள்கட்டுமான சுற்றறிக்கை<br>……………<br>இலக்கம் 06 இன் 2.2 (iii) | தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படும் வீதிகள் பராமரிப்பு முறையொன்று காணப்படவில்லை. சபைக்குச் சொந்தமான வீதிகள் வர்த்தமானியிடப்படவில்லை என்பதுடன், கொண்டு செல்லக்கூடிய அதிகூடிய பாரம் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | கிராமிய குழுக்கள் மூலம் பரிந்துரைக்கப்படும் வீதிகள் அபிவிருத்தி செய்யப்படும். வரைபடம் வரைவதற்கு பாரிய செலவீனம் ஏற்படுவதால் இச்செயற்பாடு தாமதமாகியுள்ளது. |

## 02. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,330,206 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,269,619 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட் ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | டிசம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட் ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வியாபார மற்றும் தொழிற்காலை குத்தகை | 4,035,825 | 2,408,210 | 1,694,010 | 714,200 | 1,550,000 | 1,985,775 | 1,985,775 | - |
| (ii) | கடை வாடகை | 21,493,865 | 3,464,747 | 3,094,283 | 441,149 | 426,700 | 387,000 | 316,315 | 70,685 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,228,000 | 1,172,654 | 889,629 | 273,025 | 100,000 | 296,236 | 296,236 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 13,812,270 | 10,265,602 | 6,806,595 | 4,059,007 | 3,600,000 | 3,600,000 | 3,000,000 | 600,000 |
| | மொத்தம் | 40,569,960 | 17,311,213 | 1,494,517 | 5,487,381 | 5,676,700 | 6,269,001 | 5,598,326 | 670,685 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 4,059,007 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 32,630,760 ஆகும். | கிடைக்க வேண்டிய வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019.12.31 ஆந் திகதி நிலுவையில் உள்ள நீதிமன்றத் தண்டப்பணத் தொகையில் ரூபா 1,576,187 தொகையை 2020 ஆம் ஆண்டில் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. எஞ்சிய நிதியை அறவிடுவதற்கு கேட்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற

சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 28 பிரதானமான விடயங்களை நிறைவேற்றுவதற்கான உப விதிகள் பிரயோகிக்கப்பட வேண்டியிருப்பினும், 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு குறித்த விடயங்கள் தொடர்பாக உபவிதிகள் பிரயோகிக்கப் பட்டிருக்கவில்லை | பிரதேச சபைச் சட்டத்தின் 126ஆம் பிரிவுக்கிணங்க உப விதிகள் பிரயோகிக்கப்பட வேண்டும். | உள்ளூராட்சி அமைச்சினால் பிரயோகிக்கப்பட்டுள்ள உப விதிகள் 42 மற்றும் வடமத்திய மாகாண உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சரினால் பிரயோகிக்கப்பட்டுள்ள உபவிதிகள் 10 இச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. |

**(ஆ) எதிர்பார்க்கப்படும் விளைவு மட்டத்தை (Out Put) அடைந்துகொள்ளல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் டிசம்பர் 31 இல் செயற்படுத்தப்பட்டிருந்த ரூபா 4,504,254 மதிப்பிடப்பட்ட பெறுமதியைக் கொண்ட கருத்திட்டங்கள் 09இன் பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 40 இருந்து நூற்றுக்கு 85 வரை காணப்பட்டது. | வருடத்துக்குரிய உச்ச பௌதீக முன்னேற்றதை அடைந்துகொள்ள வேண்டும். | இக்கருத்திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் கைச்சாத்திடப்பட்டிருந்தன. 2019 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஏற்பட்ட மழைவீழ்ச்சி காரணமாக இக்கருத்திட்டங்களின் எதிர்பார்த்த விளைவினை பெற முடியவில்லை. |

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கீரிக்குளம் பிரதேசத்தில் கழிவு முகாமைத்துவ மத்திய நிலையம் ஒன்றை நிர்மாணித்திருந்த போதும், குப்பைகளை சேகரிக்கும் செயற்பாடு நடைபெறவில்லை. | கழிவு முகாமைத்து வத்திற்காக செயற் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். | கழிவு மீள்சுழற்சி மத்திய நிலையத்தை ஒழுங்குபடுத்தும் வரை குப்பைகளை சேகரிப்பது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பாவனைக்கு பொருத்தமற்றது என பட்ட ரூபா 2,619,050 பெறுமதியான வாகனங்கள் 02 பாவனையில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.. | பாவனைக்கு எடுக்க இயலாத வாகனங்களை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | மதிப்பீட்டுப் பெறுமதி கிடைத்த பின்னர் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகைக்குரிய தவணைப் பணம் உரிய காலத்துக்குள் செலுத்துத்தாமையின் காரணமாக தாமதக் கட்டணமாக ரூபா 38,609 செலுத்தப்பட்டுள்ளது. | கடன் தவணை மற்றும் வட்டியை உரிய காலத்துக்குள் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் நடுப்பகுதியாகும்போது சபையின் உற்பத்தி வருமானம் நிர்வாக செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு போதுமானதாக இருக்கவில்லை. அதன் காரணமாக கடன் தவணை செலுத்துவதும் தாமதமாகியது. |

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வட மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதிய 04/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் நேரடியாக பொறுப்பு கூற வேண்டிய உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து அறிக்கையைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் பிரசவ விடுமுறை பெற்றுள்ளார். அவ்விடயம் பிரதான முகாமைத்துவ உதவியாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. |

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் செயற்படுத்தல்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| 2016 ஜனவரி 28 ஆம் திகதிய DMA/2009(1)(i) இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டிற்காக ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் சபை மட்டத்தில் நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |